செ.வெ. எண். 12 நாள். 06.04.2017

**பத்திரிக்கை செய்தி**

---

திருநெல்வேலி மாவட்டத்தில் தற்போது நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைக்கு பதிலாக ஸ்மார்ட் கார்டு வழங்கப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் தற்போது வரை 86% குடும்ப அட்டைதாரர்கள் மட்டுமே தங்களது மொபைல் எண்களை பதிவு செய்துள்ளனர். தற்போது ஸ்மார்ட் குடும்ப அட்டை வழங்குவதற்கு மொபைல் எண் அவசியம் ஆகும். பொது மக்களுக்கு அவர்களது ஸ்மார்ட் கார்டு தயாராகிவிட்டது என்பதை மொபைல் எண் மூலம் தான் தெரிவிக்கப்படுகிறது. எனவே மீதியுள்ள குடும்ப அட்டைதாரர்களிடமிருந்து மொபைல் எண் சேகரிக்கும் சிறப்பு முகாம் 08.04.2017 முதல் 13.04.2017 வரை நடைபெற உள்ளது. எனவே, மொபைல் எண் பதியாத குடும்ப அட்டைதாரர்கள் சம்பந்தப்பட்ட நியாய விலைக் கடைகளுக்கு சென்று தங்களது மொபைல் எண்களை பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் மொபைல் எண்கள்.7,8,9 என்று ஆரம்பிக்கும் எண்களாகவே பதிவு செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. பிற எண்கள் கணினியில் பதிவேற்றம் செய்ய இயலாது என்பதையும் தெரிவிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி

ந.க.எண். ண6/11250/16

மாவட்ட வழங்கல் மற்றும்
நுகர்வோர் பாதுகாப்பு அலுவலகம்
திருநெல்வேலி.
நாள்: .04.2017.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி